


# யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்

## பரிசளிப்பு விழாவும் நூற்றுப்பதினைந்தாவது ஆண்டு நிறைவுவிழாவும் – 2017

காலம் : 06.12.2017

நேரம் : மு.ப. 9.30 மணி

இடம் : பாடசாலை மண்டபம்

தலைவர்

திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை

(அதிபர்)

பிரதமவிருந்தினர்

கௌரவ நடராசா விந்தன் கனகரத்தினம் அவர்கள்

(வடக்கு மாகாணசபை உறுப்பினர்)

சிறப்பு விருந்தினர்

உயர்திரு.பிரான்சிஸ் சேவியர் அன்ரன் அவர்கள்

(கோட்டக்கல்விப்பணிப்பாளர், நல்லூர்)

## யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்

# பரிசளிப்பு விழாவும்
# நூற்றுப்பதினைந்தாவது ஆண்டு
# நிறைவுவிழாவும் - 2017

**காலம் : 06.12.2017**

**நேரம் : மு.ப. 9.30 மணி**

**இடம் : பாடசாலை மண்டபம்**

தலைவர்

**திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை**

*(அதிபர்)*

பிரதமவிருந்தினர்

**கௌரவ நடராசா விந்தன் கனகரத்தினம் அவர்கள்**

*(வடக்கு மாகாணசபை உறுப்பினர்)*

சிறப்பு விருந்தினர்

**உயர்திரு.பிரான்சிஸ் சேவியர் அன்ரன் அவர்கள்**

*(கோட்டக்கல்விப்பணிப்பாளர், நல்லூர்)*

கௌரவ விருந்தினர்

**திரு.கந்தசாமி தேவகுமாரன் அவர்கள்**

*(பழையமாணவர் , உரிமையாளர் - றெக்ஸ் ஸ்ரூடியோ)*

# நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- அதிபர் அறிக்கை
- பரிசில் வழங்கல் - தொகுதி - I
- மாணவர் பேச்சு - தமிழ்
- சிறப்பு விருந்தினர் உரை
- மாணவர் பேச்சு - ஆங்கிலம்
- பரிசில் வழங்கல் - தொகுதி II
- காவடி
- குழுப்பாடல் - ஆங்கிலம்
- பரிசில் வழங்கல் தொகுதி - III
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- பாடசாலைக்கீதம்

# ஆசிச்செய்தி

"கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடு அல்ல மற்றை அவை"

ஒரு போதும் அழியாத செல்வமே கல்வி. அதனோடு ஒப்பிடுகையில் மற்றைய செல்வம் எதுவும் அதற்கு இணையாகாது. இத்தகைய கல்வியை எமக்கு ஊட்டி வளர்ப்பதில் பாடசாலைகள் முதன்மையானவை. அறிவுக் கண்களைத் திறந்து வாழ்க்கைக்குச் சிறந்த வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் ஆசான்கள். எமது கிராமத்தின் கண் ஓர் இந்து தமிழ்கலவன் பாடசாலையாக யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயம் விளங்குகின்றது. சைவத்தையும். தமிழையும் கற்பிப்பதோடு மாணவர்களிடம் நல்லொழுக்கத்தையும் இப்பாடசாலை வளர்ப்பது கண்கூடு. இன்று கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்களைப் பாராட்டி பரிசளிப்பு விழாவினை நடாத்தி உயர்ந்து நிற்கின்றது. இங்கு கற்கின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் மேன்மேலும் கல்வி, கலைகளில் உயர்ந்து இப்பாடசாலைக்கும் இங்குள்ள ஆசிரியர்களுக்கும் பெருமையைத் தேடித் தரவேண்டும் என விசுவேச விநாயகர் பதம் பணிந்து வாழ்த்தி ஆசிகளைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுபமஸ்து.

*பிரம்மஸ்ரீ. க. பாஸ்கரக்குருக்கள்.*
*பிரதான சிவாச்சாரியார்,*
*வண்ணார்பண்ணை ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலயம்,*
*ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம்.*

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் இறையருள் வேண்டி, இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய கௌரவ வடமாகாண சபை உறுப்பினர் திருவாளர் நடராசா விந்தன் கனகரத்தினம் அவர்களே !

இன்றைய நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு பிரான்சிஸ் சேவியர் அன்ரன் அவர்களே!

இந்நன்னாளில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் எமது வித்தியா லயத்தின் பழைய மாணவரும் சிறந்த கலைத்துறை ஆர்வலருமாகிய திருவாளர் கந்தசாமி தேவகுமாரன் அவர்களே! வலயக்கல்வித்திணைக்கள அதிகாரிகளே! தோழமைப் பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! பெரியோர்களே! பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே! பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே! அன்பான பெற்றோர்களே! பாடசாலையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் எமது பாடசாலை ஆசிரியர்களே கல்விசாரா ஊழியர் அவர்களே அன்பான மாணவச் செல்வங்களே உங்கள் அனைவரையும் இந்நன்நாளில் இருகரம் கூப்பி வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய இப்பொன்னான நாளில் தங்கள் அனைவரினதும் நல்லாசிகளும் பேராதரவும் எமது பாடசாலையின் முன்னோக்கிய நகர்விற்கு ஊன்றுகோலாக அமையும் என்ற நம்பிக்கையுடன் 2017 ம் ஆண்டுக்குரிய பரிசுத்தின அறிக்கையை முன் வைக்கின்றேன்.

**பிரதம விருந்தினர் பெருமதிப்பிற்குரிய திருவாளர் நடராசா விந்தன் கனகரத்தினம் அவர்கள்:**

நான்கு பக்கமும் கடலன்னை தாலாட்ட இயற்கை எழிலுடன் நிமிர்ந்து நிற்கும் பசுந்தீவாம் நெடுந்தீவு மண்ணில் உதித்த மைந்தனாம் திருவாளர் நடராசா விந்தன் கனகரத்தினம் அவர்கள் எமது பாடசாலையின் பரிசில் தின நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருப்பது பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியா லயத்திலும், இடைநிலைக்கல்வியை யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை தமிழ் நாட்டிலும் கற்று சிறப்பெய்தினார். கல்வி கற்கும் காலப்பகுதியில் துடிப்புடன் செயலாற்றும் மாணவனாகத் திகழ்ந்தார். தமிழ்மொழி மீதும் தமிழ் மக்கள் மீதும் கொண்ட அவாவினால் கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இவர்கள் ஆற்றிவரும் அரசியல் பணி மகத்தானது. வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உறுப்பினராக ஐந்து வருடங்கள் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பல பணிகளை மேற்கொண்டார்.

2009 -2013 காலப்பகுதியில் யாழ் மாநகரசபையின் உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் தனது சமூக சேவையால் உயர்வடைந்து சமாதான நீதவான் என்னும் சிறப்புப் பட்டத்தையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். இவர் சமூகத்திற்கு ஆற்றிய அயராத உழைப்பின் பயனாக 2013 ம் ஆண்டு தேர்தல் களமிறங்கி வடமாகாணசபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவரது அயராத சேவை கல்விச் சமூகத்திற்கும் ஏழை மக்களின் துயர்துடைப்புக்கும் ஏழைக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும் பெரிதும் துணைநிற்கும் என்பது வெளிப்படை. இந்நேரம் அவர்களை வாழ்த்துவதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமை கொள்கின்றது.

**சிறப்பு விருந்தினர் நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் திருவாளர் பிரான்சிஸ் சேவியர் அன்ரன் அவர்கள்:**

சிறப்புவிருந்தினர் திருவாளர் பிரான்சிஸ் சேவியர் அவர்கள், வளம் கொழிக்கும் தென்மராட்சி பிரதேசத்தின் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டதுடன் திருகோணமலை சென் ஜோசப் கல்லூரி யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய புகழ் பூத்த கல்லூரிகளில் கல்வி கற்று உயர்நிலை அடைந்துள்ளார். இவர் தனது மாணவப் பராயத்தில் கற்றல் செயற்பாடுகளிலும் விளையாட்டத்துறை சார்ந்த செயற்பாடுகளிலும் முதன்மை மாணவனாகத் திகழ்ந்து, தான் கல்வி பயின்ற கல்லூரிகளுக்குப் பெருமை சேர்ப்பித்துள்ளார்.

இவர் விளையாட்டுத்துறையில் குறிப்பாக உதைப்பந்தாட்டத்தில் முத்திரை பதித்த ஒரு மாணவனாகத் திகழ்ந்து தான் கற்ற பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார். இவர் மும்மொழித் தேர்ச்சி மிக்க ஒரு சிறந்த அதிகாரியாகக் காணப்ப டுவதற்கு இவரது ஆரம்ப, இடைநிலை, உயர்தரக்கல்வி கற்ற கல்லூரிகளே காரணமாக அமைந்துள்ளன என்பது வெளிப்படை.

இவர் யாழ்ப்பாணப் பல்கழைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட்டு மெய்யியல் துறையைத் தேர்ந்தெடுத்து அதில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்து சிறப்புக் கலைப்பட்டதாரி பட்டத்தைப்பெற்றுக்கொண்டார். பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் விளையாட்டுத் துறையிலும் முத்திரை பதித்துள்ளார். இவர் பல்கலைக்கழகத்தில் உதைப்பந்தாட்டத்தில் மட்டு மல்லாது ஹொக்கியிலும் முத்திரை பதித்து பல்கலைக்கழக அணியின் கப்டனாக திகழ்ந்து ள்ளார். இவர் தனது ஆசிரிய வாண்மையை வலுப்படுத்தும் நோக்குடன் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டத்தை பெற்றுக் கொண்டது மட்டுமல்லாது கல்வித்துறையிலே ஒரு உச்ச நிலையை அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கில் திட்டமிடலில் முதுகலைமாணி (M.A) முதுதத்துவமாணி (M.phil) ஆகிய உயர்கல்விப் பட்டங்களையும் பெற்று சிறந்த ஒரு கல்விமானகத் திகழ்ந்து மற்றவர்களையும் வழிப்படுத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவர் தனது அர்ப்பணிப்பான சேவையால், உழைப்பால், பண்பால் தனது பதவிநிலைகளில் உயர்பதவிகளைப் பெற்றுள்ளார். அந்தவகையில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து தனது கோட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளினதும், குறிப்பாக சிறிய பாடசாலைகளில் கூடிய அக்கறை கொண்டு அப்பாடசாலைகளின் கல்விவளர்ச்சிக்காக அரும்பணியாற்றி வருகின்றார். இவரது கல்விப்பணி தொடர வாழ்த்துகின்றோம். எனவே அவர் இவ்விழாவில் சிறப்புவிருந்தினராக பங்குபற்றுவதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது.

**கௌரவ விருந்தினர் திரு கந்தசாமி தேவகுமாரன் அவர்கள்:**

நாச்சிமார் கோவிலடி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட திரு கந்தசாமி தேவகுமாரன் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை யா/திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரியிலும் கற்றுத்தேறினார். எமது பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவராகத் திகழும் இவர் ஓவியம் வரைதல், சிலைகள் செய்தல், வர்ணம் தீட்டுதல், புகைப்படம் பிடித்தல், மேடை அமைப்புக்கள் அழகுற நிர்மாணித்தல் போன்ற கலைத்துறைச் செயற்பாடுகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். சிறுவயதில் இருந்தே ஓவியம் வரைவதில் ஆற்றல் மிகுந்தவராக இவர் விளங்கியமைக்கு இவரது தாயாரும் ஒரு ஓவியராக இருந்தமை காரணமாக அமைந்தது.

ஆசிரியர் சின்னத்துரை என்பவரிடம் இருந்து கிளே, பிளாஸ்ரிக்பரிஸ் ஆகியவற்றில் இருந்து அச்சுக்கள் செய்வது, சிலைகள் உருவாக்குவது ஆகியவற்றைக் கற்றுக்கொண்ட இவர் 1972 ம் ஆண்டு இந்தியா சென்று திருச்சி மலைக் கோட்டையில் கணேசன் கலைக் கூடத்தின் ஆசிரியர் ஆ.ஏ றாஜாங்கம் என்பவரிடம் ஓவியம் சம்பந்தமான நுணுக்கங்களைக் கற்றுத்தேறி சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டார்.

மேலும் நல்லூர் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி வகுப்பிற்கு வளவாளராகவும் செயற்பட்டுள்ளார். பல ஆலயங்களுக்கு திரைச்சீலைகள் வரைந்து வழங்கி உள்ளார். தனது கலைச்செயற்பாட்டையும், புகைப்படம் எடுப்பதையும் தொழில் ரீதியாக மேற்கொண்டு வரும் இவரின் கலைப்பணி தொடரட்டும். இவர்களையும் எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

**இதர விருந்தினர்களே!**

எமது பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு சிறப்பான வழிகாட்டல்களை வழங்கி எம்மை வழிநடத்திச் செல்லும் கல்வித் திணைக்கள அதிகாரிகள், எந்நேரமும் எம்மோடு தோழோடு தோள் கொடுத்து செயற்படும் அயற்பாடசாலை அதிபர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், மற்றும் எமது பாடசாலையில் பணியாற்றிய ஓய்வு நிலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் யாவரும் இந்நேரத்தில் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது மகிழ்விற்குரியதாகும்.

**அன்பான பெற்றோர்களே!**

உங்கள் அன்பான குழந்தைச் செல்வங்களை எமது பாடசாலையில் இணைத்து அவர்கள் பரிசு பெறுவதை பார்த்து மகிழ்வதற்காக இன்று இங்கு வருகை தந்திருக்கின்றீர்கள். இதுவரை காலமும் தாங்கள் வழங்கி வந்தது போன்று தொடர்ந்தும் அவ்வப்போது உதவிகளை வழங்கி பாடசாலையின் உன்னத இலக்கை அடைவதற்கு ஒத்துழைப்பை நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். நீங்கள் அனைவரும் நிகழ்வில் கலந்து கொண்டிருப்பது மகிழ்வைத் தருகின்றது.

**அன்பான பழைய மாணவர்களே!**

பாடசாலையின் வளர்ச்சியில் அர்ப்பணிப்போடு செயலாற்றும் தங்களின் வருகை மட்டற்ற மகிழ்வைத் தருகின்றது. தொடர்ந்தும் உங்களது அரவணைப்பும் ஆதரவும் பாடசாலைக்குக் கிடைக்க வேண்டுமென எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**அன்பான ஆசிரியர்களே! கல்விசாரா ஊழியர் அவர்களே!**

எமது பாடசாலையின் கல்வி அடைவுமட்டத்திலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் உன்னத பெறுபேறுகளைப் பெற அயராது உழைக்கும் என் அன்பிற்குரிய ஆசிரிய சகோதர, சகோதரிகளே, கல்விசாரா ஊழியர் அவர்களே உங்கள் அனைவரினதும் சேவையை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன். உங்கள் செயற்பாடுகள் மேலும் சிறக்கவும் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து சேவையாற்றவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**என் அன்பிற்கினிய மாணவ மாணவிகளே!**

மாறி வரும் உலகின் சவால்களை எதிர்கொள்ளும் ஆளுமை மிக்கவர்களாக நீங்கள் உருவாகவும், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் பெரியோர்களின் வழிகாட்டலில் சிறந்த விழுமியப் பண்புகளையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடித்து சமூகம் போற்றும் உத்தமர்களாக மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# பாடசாலையின் கல்விப்பயணம்

இப்பாடசாலையானது உயர்ந்த எண்ணம் கொண்ட நிறுவுநர் அமரர் செல்லப்பா இளையதம்பி அவர்களால் 1902 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நூற்றாண்டு கடந்த பாடசாலைகளின் வரிசையில், இப் பாடசாலை தனது நூற்றுப்பதினைந்தாவது (115) ஆண்டை நிறைவு செய்து வரலாற்றுத் தொன்மைமிக்க பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்வது எமக்கு மனமகிழ்வை அளிக்கின்றது. நீண்ட காலக்கல்விப் பாரம்பரியம் மிக்க இப்பாடசாலை வரலாறு மிக்க சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்கிய பெருமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

“உள்ளத்தனையது உயர்வு” எனும் மகுடவாசகத்தைத் தன்னகத்தே கொண்டு “வளங்களை வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களை சிறந்த நற்பிரஜைகளாக மிளர வைத்தல்” என்னும் தூரநோக்குடன் செயற்பட்டு பல்வேறு சாதனைகளைப் புரிகின்ற பாடசாலையாகக் காணப்படுகின்றது.

எமது பாடசாலையைச் சுற்றி பல ஆரம்பப் பாடசாலைகளும், இடை நிலைப் பாடசாலைகளும் அமைந்திருப்பதனால் மாணவர்சேரும் வீதம் குறைவடைந்து வருகின்றது. அத்துடன் இப்பாடசாலையில் கற்க வரும் மாணவர்களில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பப்பின்னணியியைக் கொண்டவர்கள். எனவே இவர்களின் கற்றற்சூழலை வலுப்படுத்த வேண்டிய அவசியம் இப்பாடசாலையைச் சார்ந்ததாகும். பல்வேறு இடர்களின் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையால் கல்வியின் அடைவுமட்டம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா.தர)ப்பரீட்சை போன்றவற்றில் மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பித்து வருகின்றார்கள்.

இப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்றுத் தேறும் மாணவர்கள் உயர்கல்வியைப் பெற வேறு பாடசாலைகளை நாடிச் செல்கின்றனர். இவர்களில் பலர் உயர்தர வகுப்பில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகி வருவதுடன் உயர்தொழில்களிலும் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. 2014இல் செல்வன் ப.லக்ஷ்மன் மருத்துவபீடத்திற்கும், செல்வன் ப.சுதர்சன் முகாமைத்துவப்பீடத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

க.பொ.த. சாதரணப் பரீட்சையில் 2011 ஆம் ஆண்டிலிருந்து சிறந்த பெறுபேறு கிடைக்கப் பெற்று வருவதோடு, 2015, 2017 தரம் 5 புலமைப்பரீட்சையிலும் மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை பரீட்சைப் பெறுபேறுகளுக்குச் சான்றாக அமைகின்றன. இம்மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். இதே போன்று எமது பாடசாலையின் வெற்றிப்பயணம் தொடர வேண்டும் என விரும்புகின்றேன்.

இவை தவிர எமது பாடசாலையில் 19.11.2016ல் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரால் சிவதொண்டர் அணி உருவாக்கப்பட்டு இயங்கிவருவதுடன் அவர்களில் தெரிவு செய்யப்பட்ட பத்து மாணவர்களுக்கு தவணைக்கு 3000ரூபா வீதம் 30000 ரூபாவுக்கான புலமைப்பரிசில் நிதியும் வழங்கப்பட்டு வருகின்றது. எமது பாடசாலையின் சிவதொண்டர் அணி மாணவர்கள் அனைவரும் சைவபரிபாலன சபையால் நடாத்தப்படும் அனைத்து சமய விழுமியச் செயற்பாடுகளிலும் பங்கேற்று, பலரதும் நன்மதிப்பைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் சத்தியசாயிசேவா நிறுவனத்தின் சேவை யாளர்களால், ஒழுக்கவிழுமியக் கல்வியை மேம்படுத்துமுகமாக ஒவ்வொரு வியாழக்கிழமையும் நற்சிந்தனை வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களது பணி தொடர வேண்டுகின்றேன். இவர்கள் அனைவரையும் இந்நேரத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இதே நேரத்தில் எமது மாணவர்களின் கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தினரையும் அவர்களின் பணி தொடர வேண்டுமென கேட்டுக் கொள்வதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மாணவர் விபரம் 2017

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 | 01 | 01 | 02 |
| 02 | 03 | 02 | 05 |
| 03 | 01 | 01 | 02 |
| 04 | 02 | 02 | 04 |
| 05 | 04 | 03 | 07 |
| **மொத்தம்** | 11 | 09 | 20 |
| 06 | 04 | 08 | 12 |
| 07 | 04 | 04 | 08 |
| 08 | 04 | 05 | 09 |
| 09 | 10 | 04 | 14 |
| 10 | 09 | 04 | 13 |
| 11 | 09 | 05 | 14 |
| 11R | 06 | 05 | 11 |
| **மொத்தம்** | 57 | 44 | 101 |

| இல | ஆசிரியர் பெயர் | ஆசிரிய சேவை | தகைமை |
|---|---|---|---|
| 01 | திருமதி. வ. கதிரேசபிள்ளை [அதிபர்] | SLPS - 2 | B.A, PGDE, M.Ed, பயிற்றப்பட்ட வர்த்தகம் |
| 02 | திருமதி . சு. பஞ்சலோகரஞ்சன் | SLTS- 2 I | பயிற்றப்பட்ட சமூகக்கல்வி |
| 03 | திருமதி . இ. புஸ்பராசா | SLTS - I | பயிற்றப்பட்ட வர்த்தகம் |
| 04 | திருமதி . பி. இந்திரன் | SLTS - I | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| 05 | திருமதி . சு. கங்காதரன் | SLTS - I | B.SC, PGDE |
| 06 | திருமதி . வீ. ஜெயகுமார் | SLTS -2 I | பயிற்றப்பட்ட விஞ்ஞானம் |
| 07 | திருமதி . ரா. கந்தசாமி | SLTS -2 I | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| 08 | திருமதி . மா. சுரேஸ் | SLTS - I | B.A, PGDE, பயிற்றப்பட்டஆரம்பக்கல்வி |
| 09 | திருமதி . லோ. விமலகாந்தன் | SLTS -2II | B.A, PGDE, Dip in Teach நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில்நுட்பமும் |
| 10 | திருமதி . கு. உருத்திரகுமாரன் | SLTS - I | சங்கீத டீப்ளோமா |
| 11 | திருமதி . ச. சண்முகநாதன் | SLTS - I | B.Ed, பயிற்றப்பட்ட கணிதம் |
| 12 | திருமதி . ஜொ. அ. ஜெயசுதன் | SLTS - 2II | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி |
| 13 | திருமதி . சா. கீர்த்திசிங்கன் | SLTS - 2II | சித்திரம் B.F.A |
| 14 | திருமதி . சு. புவனேந்திரன் | SLTS - 2II | பயிற்றப்பட்ட தமிழ் |
| 15 | திருமதி . ரூ. ரவீந்திரன் | SLTS - 2I | சங்கீத டிப்ளோமா |
| 16 | திருமதி . சு. ஜெயரூபன் | SLTS -2I | B.A, PGDE, M.Ed |
| 17 | திருமதி . க. கோணலிங்கம் | SLTS -3I | B.A, PGDE |
| | | | |
| | திரு. சு. யோகராசா | | பாடசாலைப் பணியாளர் |

## 2015,2016,2017 இல் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

1.திருமதி.சி.இரட்னேஸ்வரன்
2.திரு.த.சிவானந்தன்
3.திருமதி.க.றஜீவன்
4.திருமதி.அ.பிரபாகரன்
5.திருமதி.ச.அருள்ராசா
6.திருமதி.இ.முரளீதரன்
7.திருமதி.சு.சந்திரகுமார்

## புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்கள்

1.திருமதி.கு.உருத்திரகுமாரன்
2.திருமதி.ஜெ.அ.ஜெயசுதன்
3.திருமதி.சு.புவனேந்திரன்
4.திருமதி.ரூ.ரவீந்திரன்
5.திருமதி.சு.ஜெயரூபன்
6.திருமதி.க.கோணலிங்கம்

## 2016 இல் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

1.திருமதி. ஜெ.விவேகானந்தன்
2.திருமதி.த.இலட்சுமிகாந்தன்

# கடமைப் பொறுப்புக்கள் - 2017

**முகாமைத்துவக்குழு**
திருமதி வ.கதிரேசபிள்ளை (அதிபர்)
திருமதி சு.பஞ்சலோகரஞ்சன்
திருமதி இ.புஸ்பராஜா
திருமதி சு.கங்காதரன்
திருமதி ச.சண்முகநாதன்
திரு வீ.ஜெயகுமார்

**ஒழுக்காற்றுக்குழு**
திருமதி வ.கதிரேசபிள்ளை(அதிபர்)
திருமதி மா.சுரேஸ்
திருமதி கு.உருத்திரகுமாரன்
திருமதி பி.இந்திரன்
திருமதி ரா.கந்தசாமி
திரு லோ விமலகாந்தன்

**இலவசப்பாடநூல்**
திரு லோ.விமலகாந்தன்

**இலவச சீருடை**
திருமதி ஜொ அ.ஜெயசுதன்

**ஆசிரியர் லீவு**
திருமதி மா.சுரேஸ்

**மாணவர் வரவு இடாப்பு**
திருமதி பி.இந்திரன்

**பாடசாலை மட்டக் கணிப்பீடு**
திருமதி சு.பஞ்சலோகரஞ்சன்
திருமதி சு.கங்காதரன்

**பாடசாலைத்தொகை மதிப்பீடு**
திருமதி சு.பஞ்சலோகரஞ்சன்
திருமதி சு.கங்காதரன்

**நேர அட்டவணை**
திருமதி ச.சண்முகநாதன்
திருமதி கு.உருத்திரகுமாரன்

**பாடசாலை சுகாதாரக் குழு**
திரு வீ.ஜெயகுமார்
திருமதி சு.கங்காதரன்

**இணைப்பாட விதானம்**
திருமதி கு.உருத்திரகுமாரன்
திருமதி ரூ.ரவீந்திரன்
திருமதி சு.புவனேந்திரன்
திருமதி சா.கீர்த்திசிங்கன்

**காலைப்பிரார்த்தனை**
திருமதி பி.இந்திரன்
திருமதி ரூ.ரவீந்திரன்
திருமதி கு.உருத்திரகுமாரன்
திருமதி மா.சுரேஸ்
திருமதி இ.புஸ்பராஜா

**உள்ளக மேற்பாரவை வகுப்பு -மதிப்பீடு**

***திருமதி வ. கதிரேசபிள்ளை(அதிபர்)***

திருமதி சு.பஞ்சலோகரஞ்சன்
திருமதி ரா.கந்தசாமி
திருமதி ச.சண்முகநாதன்
திருமதி லோ.விமலகாந்தன்

***திருமதி சு. பஞ்சலோகரஞ்சன்***

திருமதி கு.உருத்திரகுமாரன்
திருமதி சா.கீர்த்திசிங்கன்
திருமதி க.கோணலிங்கம்
திருமதி ரூ.ரவீந்திரன்

***திருமதி ச. சண்முகநாதன்***

திருமதி சு.கங்காதரன்
திருமதி இ.புஸ்பராஜா
திரு வீ.ஜெயகுமார்
திருமதி சு.புவனேந்திரன்

***திருமதி. ரா. கந்தசாமி***

திருமதி மா.சுரேஸ்
திருமதி பி.இந்திரன்
திருமதி ஜொ அ.ஜெயசுதன்
திருமதி சு.ஜெயரூபன்

**உலக உணவுக்குழு**

| **ஆசிரியர்கள்** | **மாணவர்கள்** | **பெற்றோர்** |
|---|---|---|
| 1.திருமதி.மா.சுரேஸ் | செல்வன் ம.வேணுகானன் | திருமதி.சு.யசிந்தன் |
| 2.திருமதி.ரா.கந்தசாமி | செல்வி மோ.பிறின்சியா | |

**பாடசாலை தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு**

திருமதி சு.பஞ்சலோகரஞ்சன் (தலைவர்)
திருமதி மா.சுரேஸ்
திருமதி கு.உருத்திரகுமாரன்

**பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் (SDC)**

திருமதி வ.கதிரேசபிள்ளை (அதிபர் , தலைவர்)
திருமதி இ.புஸ்பராஜா (ஆசிரியர் , பொருளாளர்)
திருமதி ய.சுமதினி (செயலாளர் , பெற்றோர்)
திருமதி மா.சுரேஸ் (ஆசிரியர்)
திருமதி சு.கங்காதரன் (ஆசிரியர்)
திருமதி தி.பத்மசிறி (பெற்றோர்)
திருமதி வ.கனிஸ்ரா (பெற்றோர்)
திரு வ.சோதிலிங்கம் (பெற்றோர்)
திருமதி வ.சசிகலா (பழைய மாணவர்)
வலய மட்டப்பிரதிநிதி : திரு.தி.தயாபரன், (உதவிக்கல்விப்பணிப்பாளர் - தமிழ்)

**பாடசாலை பெறுகைக்குழு**

**தலைவர் :** திருமதி வ.கதிரேசபிள்ளை (அதிபர்)
திருமதி ரா.கந்தசாமி
திரு வீ.ஜெயகுமார்

**விளையாட்டுக்குழு**

| | |
|---|---|
| **விளையாட்டுச் செயலர் :** | திரு.வீ.ஜெயகுமார் |
| **ஆசிரிய பிரதிநிதிகள் :** | திருமதி.இ.புஸ்பராசா |
| | திருமதி.மா.சுரேஸ் |
| | திருமதி.கு.உருத்திரகுமாரன் |
| | திருமதி.சு.பஞ்சலோகரஞ்சன் |

**இல்லப்பொறுப்பாசிரியர்கள்:**

| கேதீசர் இல்லம் | கோணேசர் இல்லம் | நகுலேசர் இல்லம் |
|---|---|---|
| திருமதி.இ.கந்தசாமி | திருமதி பி.இந்திரன் | திருமதி.சு.கங்காதரன் |
| திருமதி.சு.புவனேந்திரன் | திருமதி.ச.சண்முகநாதன் | திருமதி.அ.ஜெயசுதன் |
| திருமதி.க.கோணலிங்கம் | திருமதி.ச.ஜெயரூபன் | திருமதி.சா.கீர்த்திசிங்கன் |

# உள்ளக மேற்பார்வை சுட்டிகள் 2017

| இல | துறைகள் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|---|
| 01 | மாணவர் அடைவு | திருமதி .சு. கங்காதரன்<br>திருமதி . இ. புஸ்பராசா<br>திருமதி. சு. ஜெயரூபன் |
| 02 | கற்றல் கற்பித்தல் மதிப்பீடு | திருமதி .சு. கங்காதரன்<br>திருமதி . இ. புஸ்பராசா<br>திருமதி. சு. ஜெயரூபன் |
| 03 | முறையான கலைத்திட்டமுகாமைத்துவம் | திருமதி.வ.கதிரேசபிள்ளை (அதிபர்)<br>திருமதி. ச.சண்முகநாதன்<br>திருமதி. ரா. கந்தசாமி<br>திருமதி. சு. பஞ்சலோகரஞ்சன் |
| 04 | இணைப்பாடவிதான செயற்பாடுகள் | திருமதி.பி.இந்திரன்<br>திருமதி .சா. கீர்த்திசிங்கன்<br>திருமதி. சு.புவனேந்திரன் |
| 05 | மாணவர் நலன்புரி | திருமதி. கு.உருத்திரகுமாரன்<br>திருமதி. ரா.கந்தசாமி |
| 06 | தலைமைத்துவமும் முகாமைத்துவமும் | திருமதி. வ. கதிரேசபிள்ளை(அதிபர்)<br>திருமதி. சு. பஞ்சலோகரஞ்சன்<br>திருமதி. ச. சண்முகநாதன் |
| 07 | பௌதீகவள முகாமைத்துவம் | திருதி.சு.பஞ்சலோகரஞ்சன்<br>திருமதி.ரூ.இரவீந்திரன்<br>திருமதி. மா.சுரேஸ்<br>திருமதி.கு.உருத்திரகுமாரன் |
| 08 | பாடசாலையும் சமூகமும் | திருமதி.ஜொ.அ.ஜெயசுதன்<br>திருமதி.மா.சுரேஸ்<br>திரு.வீ.ஜெயகுமார் |



சிவதொண்டர் அணி
அங்குரார்ப்பண நிகழ்வு
19.11.2016



சிவதொண்டர் அணி
அங்குரார்ப்பண
நிகழ்வு
19.11.2016



பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு - 2016



இல்லமெய்வல்லுநர் திறனாய்வு – 2017




தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை – 2017இல் சித்தியடைந்த மாணவனும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் , அதிபர் ஆசிரியருடன்



பாடசாலை பான்ட் அணி

அன்பளிப்பு: Dr.தாரணி குருபரன்



சிவதொண்டர் அணி அங்குரார்ப்பண நிகழ்வு

19.11.2016





# பாடசாலை மன்றங்கள்

## இந்துமா மன்றம்

**பொறுப்பாசிரியர்கள் :** **திருமதி ஞ.ரவீந்திரன்**
**திருமதி.கு.உருத்திரகுமாரன்**
**தலைவர் :** **செல்வன் தெ.திசங்கன்**
**செயலாளர் :** **இ.லங்சி**
**உபசெயலாளர் :** **ப.மதுசா**

மாணவர்களிடத்தில் ஒழுக்கவிழுமியங்களை ஏற்படுத்துதல், சமய ஆசாரங்களை பின்பற்றச் செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், காலைப்பிரார்த்தனையிலும் பக்திபூர்வமாக வழிபாடு இடம் பெற்று வருகின்றது. திங்கட்கிழமை மாணவர் நற்சிந்தனை, புதன்கிழமைகளில் ஆசிரியர் நற்சிந்தனை, வியாழக்கிழமைகளில் சாயி இறைபணியாளர்களின் நற்சிந்தனை இடம் பெறுகிறது. சமயக்குரவர்களின் குருபூசைத்தினம் நவாரத்திரி விழா என்பன சிறப்பாக நடைபெறுகிறது. நவராத்திரி விழாவில் மாணவரிடையே மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் சகலகலாவல்லிமாலை பஞ்சபுராணம் ஓதுதல் என்பவற்றில் போட்டிகள் நடாத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

## கணித விஞ்ஞான மன்றம்

**பொறுப்பாசிரியார்கள் :** **திரு வீ.ஜெயகுமார்**
**திருமதி ச.சண்முகநாதன்**
**திருமதி சு.கங்காதாரன்**
**தலைவர் :** **இ.லங்சி**
**செயலாளர் :** **ச.சாளினி**
**பொருளாளர் :** **தெ.திசங்கன்**

கணித விஞ்ஞான எண்ணக்கருக்கள் தொடர்பான அறிவினை மாணவர்களிடையே விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் கணித விஞ்ஞான மன்றத்தினூடாக நடைபெறுகின்றது. வினாவிடைப் போட்டிகள், விஞ்ஞான் விளக்கங்கள், குழுப் போட்டிகள், குறு நாடகங்கள் என்பன இடம் பெற்று வருகின்றன. மேலும் சர்வதேச தினங்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆசிரியர்கள், மாணவர்களால் நடாத்தப்படுகின்றன. இம்மன்றத்தினூடாக பாடசாலை சக்தி வளக்கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இக் கழகத்தினூடாக சக்திவளங்களும் எதிர்கால சந்ததியினரின் பயன்பாடுகளும் என்பது தொடர்பான செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

## முத்தமிழ் மன்றம்

**பொறுப்பாசிரியர்** : **திருமதி சு.புவனேந்திரன்**
**தலைவர்** : **செல்வன் ம.வேணுகானனன்**
**செயலாளர்** : **செல்வி மோ.பிறின்சியா**
**பொருளாளர்** : **செல்வன் வா.பார்த்தீபன்**

மாணவர்களின் இயல், இசை, நாடக செயற்பாடுகளையும் தமிழ் மொழியினையும் மேம்படுத்துவதற்காக மாதந்தோறும் மன்றச்செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மாணவர்களின் கலைத்திறன்களை வெளிக்காட்ட இம்மன்றம் களமாக விளங்குகின்றது. பலதரப்பட்ட கலை வடிவங்களும் இம் மன்றத்தில் நடைபெற்று வருகின்றன. மாணவர்களின் தமிழ் மொழி அறிவினை மேலோங்கச் செய்வதற்காக வினாவிடைப் போட்டிகள், நிகழ்த்தப்படுகின்றன. தமிழ்த் தினப்போட்டியில் மாணவர்கள் வினாடிவினாப்போட்டி, பேச்சுப் போட்டி,வாசிப்பு போட்டிகளில் பங்குபற்றிச் சான்றிதழ் பெற்று வருகின்றனர். கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டியில் பிரிவு II வாசிப்பில் 1ம் இடத்தையும், பிரிவு III இல் பேச்சுப் போட்டியில் 2ம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. நல்லூர் பிரதேச செயலகம் நடத்திய தேசிய கலை இலக்கிய பெருவிழாவில் பிரிவு II கவிதை ஆக்கத்தில் 1ம், 3ம் இடங்களையும், கவிதை பாடல் பேட்டியில் 2ம் இடத்தையும் பெற்றமையும் சிறப்பம்சமாகவுள்ளது.

## சமூக விஞ்ஞான மன்றம்

**பொறுப்பாசிரியர்** : **திருமதி சு.பஞ்சலோகரஞ்சன்**
**தலைவர்** : **செல்வி இ.லங்சி**
**செயலாளர்** : **செல்வன் தெ.திசங்கன்**
**உபசெயலாளர்** : **செல்வி ஜெ.சர்மிளா**

மாணவர்களிடையே சமூக விஞ்ஞான அறிவினை மேம்படுத்துவதற்காக சமூக விஞ்ஞான மன்றச் செயற்பாடுகள் இடம் பெற்றுவருகின்றன. 2014ம் ஆண்டு நடைபெற்ற சமூக விஞ்ஞான பொது அறிவுப்போட்டியில் தரம் 7 தரம் 10 மாணவர்கள் கோட்டமட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். தரம் 10 செல்வன் வி.கனிஸ்ரன் மாகாணமட்டதிற்குத் தெரிவு செய்யப்பட்டார்.2015ல் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியிலும் தரம் 11 இல் வி.கனிஸ்ரன் மாகாணமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். மற்றும் தரம் 7,10,11 மாணவர்கள் கோட்டமட்டத்திற்கு தெரிவாகியிருந்தனர். அனர்த்தப் பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பான அறிவுறுத்தல் செயற்பாடுகள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## இன்ரறக்ற் கழகம்

| | | |
|---|---|---|
| **பொறுப்பாசிரியர்** | : | **திருமதி இ.புஸ்பராஜா** |
| **தலைவர்** | : | Int **லங்சி** |
| **செயலாளர்** | : | Int **கபில்ராஜ்** |
| **பொருளாளர்** | : | Int **பிறின்சியா** |
| **பத்திராதிபர்** | : | Int **சர்மிளா** |
| | | Int **விபோதிகா** |

திருமதி இளந்திரை புஸ்பராஜாவை பொறுப்பாசிரியராகக் கொண்டு 20.09.2011 அன்று இக்கழகமானது எமது பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கழகமானது பாடசாலை சமூகம் சார் செயற்பாடுகளில் பங்கு பற்றி வருகிறது.

இக் கழகத்தில் தரம் 9,10,11 ஜச் சேர்ந்த 27 மாணவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பி.ப 1.35 மணிக்கு கழகக் கூட்டம் இடம் பெற்று வருகின்றது. கடந்த காலங்களில் றோட்டறிக் கழகத்திலிருந்து கலந்து கொண்டு கழகம் பற்றிய செயற்பாடுகள் பற்றி அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்றனர். யாழ் றோட்டறிக் கழக இணைப்பாளர் Rot டினேஸ் அவர்கள் ஆலோசனைகள் பல எமது கழகத்திற்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இனி வரும் காலங்களிலும் இக் கழகத்தினர் தங்களாலியன்ற சேவையை பாடசாலையினுள்ளும் சமூகத்திலும் வழங்க ஆர்வத்துடன் உள்ளனர்.

# English Union

| | | |
|---|---|---|
| Patron | : | Mrs.V.Kathiresapillai (Principal) |
| Vice patrons | : | Mr.L.Vimalakanthan |
| | | Mrs.P.Elanthirai |
| President | : | Miss.R.Langsi |
| Vice President | : | Miss.S.Shalini |
| Secretary | : | Miss.M.Princhiya |
| Vice Secretary | : | Mas.P.Thanusan |
| Treasurer | : | Mas.S.Kabilrajh |
| Editors | : | Miss.J.Sharmila |
| | | Mas.R.Ratheestan |

English is an international language that opens the door to a vast treasure house of knowledge. Without English it would hardly make sense to talk of education in the modern word. We at J/ Elayathamby Hindu Vidyalayam, have always stressed the importance of English.

The English union as usual conducted a number of competitions among the student from Gr.3 to Gr 11 in the years. These competitions among students helped them to show interests in English Language.

The colourful English Day was celebrated on 5.10.2016 in our school main hall. Our students exhibited their various talents on this day. And students who won the places in these competitions were also awarded. As usual the programmes were highly appreciated by the gathering.

Ever year the students from Grade 3 to 11 participate in the Department (Division/zonal) competitions and they are selected till the semi – final and final too. Besides the spoken English period in classes,we have had a varieties of activities like spoken English. Environmental programme is conducted in the mornings on Thursday.

# பரிசு பெறும் மாணவர் விபரம் 2015-2016

**தரம் – 01**

| | | | |
|---|---|---|---|
| ரா.ரிஷிதரன் | பொதுத்திறன், | கோலம் | - 3ம் இடம் |
| ச.லக்ஷனா | பொதுத்திறன், | கோலம் | - 1ம் இடம் |
| வி.விஜிதா | பொதுத்திறன் | | |
| ப.பகீதரன் | கோலம் | | - 2ம் இடம் |

**தரம் – 2**

| | | | |
|---|---|---|---|
| ப.பிருத்திகா | பொதுத்திறன், | கோலம் | - 1ம் இடம் |

**தரம் – 3**

| | | | |
|---|---|---|---|
| ஜெ.யதுசனா | பொதுத்திறன், | கோலம் | - 1ம் இடம் |

**தரம் – 4**

| | | | |
|---|---|---|---|
| ரா.கிஷாந் | பொதுத்திறன், | கோலம் | - 3ம் இடம் |
| | சகலகலாவல்லிமாலை | | - 1ம் இடம் |
| ச.கவின்சன் | பொதுத்திறன் | | |
| தீ.அஸ்வின் | பொதுத்திறன், | கோலம் | - 1ம் இடம் |
| ய.மானஷா | பொதுத்திறன், | கோலம் | - 2ம் இடம் |
| | | சகலகலாவல்லிமாலை 2ம் இடம் | |
| சு.தமிழினி | சகலகலாவல்லிமாலை | | - 3ம் இடம் |

**தரம் 5**

| | |
|---|---|
| ஜீ.சானுகா | பொதுத்திறன், விரைவுகணிதப் போட்டி கோட்டமட்டம் 4 இடம், சகலகலாவல்லிமாலை 2ம் இடம், சத்தியசாயிசர்வதேச நிறுவனம் கட்டுரைப் போட்டி 1ம் இடம் |
| ச.கோபிஷா | பொதுத்திறன், கோலம் 1ம் இடம், சகலகலாவல்லிமாலை 1ம் இடம் |
| சு.வைஷ்ணவி | பொதுத்திறன் |
| வீ.பிறீத்திகா | பொதுத்திறன், கோலம் 1ம் இடம் |
| ச.ஜானுஜா | சத்தியசாயிசர்வதேச நிறுவனம் கட்டுரைப் போட்டி திறமைச்சான்றிதழ் |
| ச.பானுஜா | சத்தியசாயிசர்வதேச நிறுவனம் கட்டுரைப் போட்டி திறமைச் சான்றிதழ் |

**விசேடபரிசு பெறுவோர்**

| | | |
|---|---|---|
| ச.சார்மி | வி.மதுசன் | வ.தரணியா |
| ம.மதுசா | த.யசோதரன் | ச.சந்தோஷ் |
| வி.விதுசன் | ச.சதுசன் | |
| அ.மேரிடயானா | சு.ராகுல்காந் | |

**தரம் 6**

ப.சாருஜன் — பொதுத்திறன் (சமயம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், விஞ்ஞானம், சித்திரம், வாழ்.தே,சுகாதாரம்)

வ.பிரபாகரி — பொதுத்திறன் (சமயம், தமிழ், கணிதம்,புவியியல், விஞ்ஞானம், சங்கீதம்) கோலம் 2ம் இடம், சகலகலாவல்லிமாலை 2ம் இடம், சத்தியசாயிசர்வதேச நிறுவனம் கட்டுரைப் போட்டி திறமைச் சான்றிதழ்

சி.பிரசாத் — கோலம் 3ம் இடம்

**தரம் 7**

தீ.லக்சிகா — பொதுத்திறன் (சமயம், தமிழ், கணிதம், வரலாறு, புவியியல், விஞ்ஞானம், சங்கீதம், வாழ்.தே,) கோலம் 3ம் இடம், சமூக விஞ்ஞான போட்டி 2ம் இடம்

ஜெ.சுதர்சன் — பொதுத்திறன் (தமிழ், விஞ்ஞானம், சுகாதாரம், சித்திரம், வா.தே, ) கோலம் 3ம் இடம், சகலகலாவல்லிமாலை 3ம் இடம்

த.தனுசா — பொதுத்திறன் (தமிழ், சுகாதாரம், சித்திரம் ) கோலம்,1ம் இடம் சகலகலாவல்லிமாலை 2ம் இடம்

பு.தஷாயினி — சகலகலாவல்லிமாலை 1ம் இடம்

**விசேடபரிசு பெறுவோர்**

மோ.கஜீபன்
ரா.சானுஜன்
ஜெ.டினுஷாந்
த.கிசோதரன்
அ.டயன்
ய.அஜய்
வ.காஞ்சினி
பொ.ஆயிஷா

**தரம் 8**

| | |
|---|---|
| தெ.திசங்கன் | பொதுத்திறன் (சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், விஞ்ஞானம், சித்திரம், குடியுரிமை,சுகாதாரம்) நல்லூர் பிரதேச கலாச்சார பிரிவு கவிதை 1 ம் இடம், சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டி 2 ம் இடம் கோட்டம், வலயம் |
| சு.பவித்திரன் | பொதுத்திறன் (தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை) நல்லூர் பிரதேச கலாச்சார பிரிவு கவிதை 3 ம் இடம், நல்லூர் பிரதேசமட்ட இலக்கிய விழா 2016 கவிதை 3 ம் இடம் |
| சு.சுதர்சன் | பொதுத்திறன் (தமிழ், கணிதம், புவியியல், விஞ்ஞானம், செய்.தொ.நுட், சுகாதாரம்) கோலம் 3ம் இடம் |
| ம.லிபோசினி | பொதுத்திறன் (சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, சங்கீதம்) சகலகலாவல்லிமாலை 2 ம் இடம் |
| நா.அனிக்சன் | சகலகலாவல்லிமாலை 1ம் இடம், தோரணம் பின்னல் 1 ம் இடம் |
| ஜெ.டினோஜன் | விசேடதேவை மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி - பந்துஎறிதல் 3 ம் இடம், 50 m ஓட்டம் 1 ம் இடம். |

**தரம் 9**

| | |
|---|---|
| ம.வேணுகானன் | பொதுத்திறன் (சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம்) தமிழ் மொழித்திறன் கோட்ட மட்டம் 2016 பேச்சு 3 ம் இடம் |
| ச.சாளினி | பொதுத்திறன் (சமயம், தமிழ், சித்திரம்,குடியியல், செய் மு. தொ. நு) சகலகலாவல்லிமாலை 2 ம் இடம் |
| ப.தனுசன் | பொதுத்திறன் (விஞ்ஞானம், கணிதம்,சுகாதாரம்) |
| வி.கனிஸ்ரா | பொதுத்திறன் (சமயம், தமிழ், சங்கீதம்) |
| வி.சயன்ராஜ் | சங்கீதம், சகலகலாவல்லிமாலை 2 ம் இடம் |
| வா.பார்த்தீபன் | சங்கீதம், கோலம் 2 ம் இடம், சகலகலாவல்லி மாலை 3 ம் இடம் |

**விசேடபரிசு பெறுவோர்**

ச.டிலக்சன்
பொ.யோகவேல்
வி.பெனியேல்
ப.நிரோசிகா
ம.மதுசா
ஜெ.பவித்திரா
ரா.சாரங்கி
பு.கனுஷா
மு.சசிகரன்

**தரம் 10**

| | |
|---|---|
| இ.லங்சி | பொதுத்திறன் (சமயம், கணிதம், வர்த்தகம்,சுகாதாரம், சங்கீதம்) கோட்டமட்ட மெய் வன்மைப்போட்டி 100m ஓட்டம் 3 ம் இடம் |
| மோ.பிரிஞ்சியா | பொதுத்திறன் (சமயம், தமிழ், வரலாறு, சித்திரம்) கோட்டமட்டம் 200 m ஓட்டம் 2 ம் இடம், சகலகலாவல்லிமாலை 1 ம் இடம், கோலம் 3 ம் இடம் |
| ஜெ.சர்மிளா | கோலம் 3 ம் இடம், சகலகலாவல்லிமாலை 3 ம் இடம், மாலை கட்டுதல் 1 ம் இடம் |
| வா.விபோதிகா | சகலகலாவல்லிமாலை 2 ம் இடம் |
| சு.சுகிந்தன் | கோலம் 1 ம் இடம், தோரணம் பின்னல் 1 ம் இடம் |
| ச.கபில்ராஜ் | தோரணம் பின்னல் 3 ம் இடம் |
| ரா.ரதிஸ்வரன் | தோரணம் பின்னல் 2 ம் இடம் |

**தரம் 11**

| | |
|---|---|
| வ.சோபிகாந் | பொதுத்திறன் (சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, வர்த்தகம்) நல்லூர் பிரதேச செயலக கலாச்சார பிரிவு கட்டுரைப்போட்டி 3 ம் இடம், நல்லூர் பிரதேசமட்ட இலக்கிய விழா 2016 கட்டுரைப் போட்டி 3 ம் இடம், சகலகலாவல்லிமாலை 2ம் இடம், சத்தியசாயி சர்வதேசநிறுவன கவிதைப்போட்டி திறமைச்சான்றிதழ். |
| வீ.தர்சினி | பொதுத்திறன் (தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல்) கோலம் 3 ம் இடம், சகலகலாவல்லிமாலை 3ம் இடம் |
| சு.சுலக்சன் | பொதுத்திறன் (சமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, வர்த்தகம், சித்திரம்,சுகாதாரம்) சத்தியசாயி சர்வதேச நிறுவனம் கவிதைப்போட்டி திறமைச் சான்றுதழ் |
| நா. லக்சன் | பொதுத்திறன் (விஞ்ஞானம், கணிதம், சித்திரம்,சுகாதாரம்) தோரணம் பின்னல் 2 ம் இடம் |

**விசேடபரிசு பெறுவோர்**

ர.கஜீபன்
கு.திவ்வியன்
உ.விதுராஜ்
ச.பிரியங்கா
ர.சங்கீத்
க.யே.நிரோஜன்
சு.டனுசன்

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

**2015** **வகுப்பாசிரியர்: திருமதி.யசிந்தா ஜெயக்குமார்**

| | | |
|---|---|---|
| காந்தரூபன் சஞ்ஜெய் | - | 166 **சித்தி** |
| பிரபாகரி வசந்தகுமார் | - | 142 |
| பகீதரன் சாருஜன் | - | 132 |
| அபிராமி பத்மநாதன் | - | 108 |
| மோகன் கஜீபன் | - | 84 |
| சிவலிங்கம் பிரசாத் | - | 80 |

**2016** **வகுப்பாசிரியர்: திருமதி.சத்தியரூபி அருள்ராசா**

| | | |
|---|---|---|
| சானுகா ஜீவராஜன் | - | 146 |
| ஜானுஜா சந்திரமோகன் | - | 136 |
| கோபிஷா சந்திரமோகன் | - | 133 |
| தரணியா வர்ணன் | - | 121 |
| பீறீத்திகா விஜயகுமார் | - | 120 |
| வைஷ்ணவி சுகந்தன் | - | 117 |
| பானுஜா சந்திரமோகன் | - | 111 |
| தனுசியா குகேந்திரன் | - | 103 |
| தரணிதரன் யசோதரன் | - | 76 |
| சதீஸ்வரன் சதுஷன் | - | 74 |
| சுகுமார் ராகுல்காந் | - | 61 |
| விஜயபாலன் மதுசன் | - | 59 |

**2017** **வகுப்பாசிரியர்: திருமதி.ராஜேஸ்வரி கந்தசாமி**

| | | |
|---|---|---|
| ராமச்சந்திரன் கிஷாந் | - | 161 **சித்தி** |
| சதீஸ்வரன் கவின்சன் | - | 133 |
| தீபன் அஸ்வின் | - | 119 |
| மானஷா யசிந்தன் | - | 88 |
| தமிழினி சுதாகரன் | - | 79 |
| சத்தியசீலன் சந்தோஷ் | - | 60 |

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

**2011**

| | |
|---|---|
| செல்வன் பரமேஸ்வரன் சுதர்சன் | 6A 2C 1S |
| செல்வன் ஜெயசுதன் குணசீலன் | 1B1C4S |

**2012**

| | |
|---|---|
| செல்வி அஜந்தினி பழனிவேல் | 1A1B1C6S |
| செல்வி கார்த்திகா மகேந்திரன் | 1A 2B 5S |

**2013**

| | |
|---|---|
| செல்வி ரசிக்கா மோகன் | 1A 4C 3S |

**2014**

| | |
|---|---|
| செல்வன் நாகேந்திரம் காருசன் | 1A 5C 2S |
| செல்வி கிருஷாந்தினி விக்கினேஸ்வரன் | 2A 1B 2C3S |

**2015**

| | |
|---|---|
| செல்வன் இரட்ணகோபால் சுபாஸ்குமார் | 2A 1B 4C2S |
| செல்வன் விஜயன் கனிஸ்ரன் | 1A 4B1C2S |

**2016**

| | |
|---|---|
| செல்வன் வரதராஜன் சோபிகாந் | 4A 4C |
| செல்வன் சுதாகரன் சுலக்சன் | 2A 4C 2S |
| செல்வி வீரபாண்டியன் தர்சினி | 1A 2B 1C4S |
| செல்வன் நாகேந்திரம் லக்சன் | 4C3S |

# பாடசாலைப் பரிசளிப்பு விழா
# அனுசரனையாளர்கள்

**திருமதி தாரணி குருபரன் (வைத்திய கலாநிதி)**

*புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும்
*க.பொ.த (சா.தர)ப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் H.N.B சேமிப்பு வைப்பு.

**அமரர் தம்பிராஜா சுதர்சன் அவர்களின் ஞாபகார்த்தமாக (முன்னாள் ஆசிரியர் யா/புங்குடுதீவு ம.வி)**

*புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கானது
*க.பொ.த(சா.தர) ப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கானது
வழங்கியவர்: ஆசிரியர் சுபாசினி புவனேந்திரன் அவர்கள்.

***மதிய உணவு உபசரணை***

திரு.திருமதி. விஜியேந்திரன் குடும்பம்

***சிற்றுண்டி***

திரு. திருமதி. சந்திரமோகன் குடும்பம்
திரு. திருமதி. விஜயகுமார் குடும்பம்
திரு. திருமதி. கணேசரட்ணம் குடும்பம்

***மேடை அலங்கரிப்பு***

திரு.திருமதி சுந்தரம் குடும்பம்
திரு.திருமதி ராஜ்குமார் குடும்பம்

***மண்டப கதிரை ஒழுங்கு***

திரு. திருமதி தீபன் குடும்பம்
திரு. திருமதி யசிந்தன் குடும்பம்

***தேனீர், குளிர்பான உபசரணை***

திருமதி. கவிதா தரணிதரன் குடும்பம்
திரு.திருமதி. சுகந்தன் குடும்பம்

***ஒலி, ஒளி அமைப்பு***

திரு.திருமதி.தெய்வேந்திரம் குடும்பம்

***மாலை ஒழுங்கு***

திரு.திருமதி சுகுமார் குடும்பம்
திரு.திருமதி தவராஜசிங்கம் குடும்பம்

***பரிசுத்தின அழைப்பிதழ் - பரிசுத்தின அறிக்கை***

திரு.திருமதி முத்துச்சாமி குடும்பம்
திரு.திருமதிமனோகரலிங்கம் குடும்பம்
திரு.திருமதி மோகனதாஸ் குடும்பம்
திரு.திருமதி வசந்தகுமார் குடும்பம்

***மாணவர்களுக்கான பரிசுப் பொருட்கள்***

திரு.திருமதி.வெ.சுதாகரன் [பழையமாணவர், உரிமையாளர் நீலாம்பரி உணவகம்]
திரு.சி.ரதீஸ்வரன் [பழையமாணவர்]
திரு.வ.விதுசன் [பழையமாணவர்]
திருமதி.சு.சந்திரகுமார் [முன்னாள் ஆசிரியை]
திரு.திருமதி.த.விஜயமோகன் [பழையமாணவர்]
திரு.த.துளசிராம் [பழையமாணவர்]
திருமதி.சி.தங்கராணி [பெற்றோர்]
திரு.திருமதி.கலாவர்ணன் குடும்பம்
திரு.திருமதி.சற்குணானந்தராசா குடும்பம்

## பாடசாலைக்கான எதிர்காலத் தேவைகள்

- பாடசாலைக்கான முகப்பு பெயர்வளைவு அமைத்தல்
- இரண்டு மாடிக் கட்டடம் (பிரார்த்தனை மண்டபத்துடன்)
- அனைத்துக்கட்டிடங்களுக்கும் வர்ணம் பூசுதல்
- விளையாட்டு மைதானம்
- விஞ்ஞான ஆய்வுகூடம்
- நூலகம்
- பாடசாலைக்கான காணி
- பல்லூடக எறியி
- கதிரை (பிளாஸ்ரிக்-100)
- மடிக் கணனி
- விளையாட்டு உபகரணங்கள்
- மாணவர்களுக்கான தளபாடங்கள் (கதிரை மேசை)
- மூடிய வகுப்பறை
- பாடசாலைக் காவலாளி
- பாடசாலை சுத்திகரிப்புத் தொழிலாளி

# நன்றியுரை

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

எமது அழைப்பை ஏற்று வருகை தந்து எமது வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்ததுடன், பரிசில்களையும் வழங்கியமைக்காக ***திருவாளர் நடராசா விந்தன் கனகரத்தினம்*** (கௌரவ வடமாகாணசபை உறுப்பினர்) அவர்களுக்கு முதற்கண் பாடசாலைச்சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்ததாக, பல்வேறு வேலைப்பளுக்களின் மத்தியிலும் எமது அழைப்பினை ஏற்று சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து சிறப்பித்தமைக்காக ***திரு.பிரான்சிஸ் சேவியர் அன்ரன்*** (கோட்டக்கல்விப்பணிப்பாளர் - நல்லூர்) அவர்களுக்கும் பாடசாலைச்சமூகம் சார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அடுத்து கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த ***திரு.கந்தசாமி தேவகுமாரன்*** (உரிமையாளர் - றெக்ஸ் ஸ்ரூடியோ) அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

தொடர்ந்து எமது அழைப்பை ஏற்று வருகை தந்து விழாவினைச்சிறப்பித்த கல்வித்திணைக்கள அதிகாரிகள், அயற்பாடசாலை அதிபர்கள், ஓய்வு நிலை அதிபர்கள் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மற்றும் ஏனைய விருந்தினர் அனைவருக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இன்றைய பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெறப் பரிசில்களை வழங்கி உதவியவர்களுக்கும், பரிசில்தினத்திற்கான அறிக்கை மற்றும் அழைப்பிதழ், சிற்றுண்டி, மதியபோசனம், ஒலி-ஒளி அமைப்பு, படப்பிடிப்பு ஒழுங்கு, மேடை அலங்காரம் என்பவற்றை செய்து உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது பாடசாலைச்சமூகத்தின் சார்பிலான நன்றிகள் உரித்தாகுக.

இன்னும், எமது பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற அனைத்து விதத்திலும் உதவிய நல்உள்ளங்களுக்கும், குறிப்பாக பாடசாலை கற்றல் கற்பித்தலுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அயராது உழைத்து வரும் எமது பாடசாலை ஆசிரியர்களுக்கும், கல்விசார ஊழியருக்கும், மாணவச் செல்வங்களுக்கும் எனது மேலான நன்றிகள். எல்லாவற்றுக்கும் மேலாக, இவ்வறிக்கையினைக் குறுகிய காலத்தில் அச்சுப்பிரதி செய்து உதவிய "மதிகலர்ஸ் பிறிண்டேர்ஸ்" நிறுவனத்தினருக்கும், விழா சிறப்பாக அமைய நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வழங்கிய திரு.பா.சுபதீசன் (முன்னாள் தொண்டராசிரியர், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்) அவர்களுக்கும், நிகழ்வுகளைத் தயார் செய்து மேடையேற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும், இன்னும் யாருக்காவது நன்றி கூறத்தவறியிருப்பின், அவர்களுக்கும் பாடசாலைச்சமூகம் சார்பாக இருகரம் கூப்பி நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி

**அதிபர்**
**யா/இளையதம்பி இந்துவித்தியாலயம்.**

## வித்தியாலய கீதம்

செந்தமிழ் கல்விகலை தரும் இளையதம்பி
இந்து வித்தியாலயம் வாழியவே
நற்றமிழ் போலவே நானிலத்தில் என்றும்
நாமகள் அருளால் வாழியவே.

எழுத்தறிவித்திடும் அதிபர் ஆசிரியரை
என்றென்றும் பணிந்து நாம் துதித்திடுவோம்
பழுத்த செந்தமிழின் பல்கலைக் கல்வியும்
பாரினில் தருவாள் இந்து வித்தியாலயம்.


வண்ணைப் பதிவளரும் வண்டமிழ் கலைக்கூடம்
வாழ்த்தியே ஸ்தாபித்தார் இளையதம்பி
கண்ணெனக் கல்விகலை காசினியில் எமக்கு
கனிந்தூட்டுவாள் இந்து வித்தியாலயம்.

ஆலயமும் வீதிகளும் இருபுறம் அமைந்திட
ஆண் பெண் இருவரும் ஆனந்தமாய்க் கற்றிட
இல்லங்கள்மூன்றும் இனிதே விளங்கிடும்
இந்து வித்தியாலய அன்னை வாழியவே.

வாழிய பல்லாண்டு இளையதம்பி இந்து
வித்தியாலய அன்னை பாரினிலே
வாழிய என்றென்றும் வண்டமிழ் போலவே
வித்தியாலய அன்னை வாழியவே.







பாடசாலையின் ஆரம்பகாலத் தோற்றம்



பாடசாலையின் ஆரம்பகாலத் தோற்றம்

1957



மாணவர் பாராளுமன்ற நிகழ்வு